332

# தமிழ்த் திருமணம்.

332/2.53

12 MAY

4:54.27
N53
2326

பாரிப்பாக்கம். கண்ணப்ப முதலியார்.

ஓம்
திருச்சிற்றம்பலம்

# தமிழ்த் திருமணம்

OFFICE OF THE ... 12 MAY ... MADRAS

சித்தாந்தப் பேராசிரியர்
பாரிப்பாக்கம். கண்ணப்ப முதலியார் அவர்கள்
எழுதியது

திருவாளர் கடுவங்குடி - சோமசுந்தரம் அவர்களால்
வெளியிடப்பட்டது

உரிமை ஆசிரியருக்கே] [விலை 4 அணா

சென்னை
இராஜேஸ்வரி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
1953

ஓம்
திருச்சிற்றம்பலம்

# முன்னுரை

—o—

தமிழ்த் திருமணம் என்னும் இந்நூல், திருமணங்களைச் செந்தமிழ் மாமறையின் மந்திரப் பாடல்கள் கொண்டு நிகழ்த்து முறையினைத் தெளித்துரைப்பது. இம்மந்திரப் பாடல்களால் திருமணம் நிகழ்த்துதலே தெய்விகச் சிறப்புடையதாமென ஆன்றோர் திருவாக்குகளால் விளக்கிக் காட்டுவது.

அழலோம்பற் செயலுக்குத் திருவாரூரின் மேலதாகிய போற்றித் திருத்தாண்டகம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பதிகத்தின்கண் 108 போற்றிகள் வந்துள்ளன, 'அட்டோத்திர சதம்' என்னும் ஓர் அருச்சனை முறைக்கு இஃது ஏற்றதாக இருத்தலின் அன்பர்கள் எல்லோரும் ஒரே முறையாக அழலோம்பற் செயலுக்கு இதனையே மேற் கொள்ளுதல் தமிழ்த் திருமண நெறிமுறைக்கு நலம் பயப்பதாகும்.

இப்பதிகமோதி அழலோம்பல் சிறிது நேரமாவதாயினும், ஒருவனது வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு அருஞ்செயலில் இறைவன் திருவருளை நினைந்து அதன்கண் அறிவு தோய்ந்து மனமுருகி அதனைச் செய்தலே திருவருட்டுணைக்கு ஏற்புடையதாம்.

16—7—1939-ல் பல்லாவரம் மறைத்திரு மறைமலை அடிகளார் தலைமையில் நடைபெற்ற திருமண மாநாட்டின் தீர்மானங்களை மேற்கொண்டே இந்நூல் வகுக்கப்பட்டுள்ளது. தமிழ் மரபிற்கு இயையாததும், பொருளற்றதுமான சடங்குகள் விலக்கப்பட்டுள்ளன. இன்னும் சில சடங்குகளை நீக்க விரும்புவோர் நீக்கிக் கொள்ளுக. செந்தமிழ் மாமறை மந்திரப்பாடல்கள் கொண்டு இறை வழிபாடு புரிந்து திருமணம் செய்தலே திருவருள் நெறிப்பட்டதாம் என்பதே எமது குறிக்கோளாகும்.

இந்நூலினைத் தம் பொருட் செலவில் வெளியிட்டுதவிய கெழுதகை நண்பர் திரு. சோமசுந்தரம் அவர்கட்கும், இதன் அச்சுப்படிகளைத் தம் நற்கருத்துக்களுடன் திருத்தி உதவிய எம் கெழுதகை நண்பரும், திருமண மாநாட்டினை நடத்திய தமிழர் நல்வாழ்க்கைக் கழகத்தின் அமைச்சர்களில் ஒருவருமாகிய தமிழ்ப் பேராசிரியர் மயிலை சிவமுத்துக் குமாரசாமி முதலியார் அவர்கட்கும், அச்சுப் படிகளை திருத்துதற்கண் நல்லுதவி புரிந்த எம் அன்பிற்குரிய நண்பர் புலவர். தணிகை உலகநாதர் அவர்கட்கும் எம் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேம்.

இந்நூல் அச்சிட்டு முடிவதற்குப் பல்லாற்றானும் நல்லுதவி புரிந்த நண்பரும், தமிழர் நல்வாழ்க்கைக் கழகத்தின் செயலாளருமாகிய திரு. B. N. குருசாமி அவர்கட்கும் எம் நன்றி உரியதாகுக.

சென்னை-1, 20-4-1953 } பாரிப்பாக்கம். கண்ணப்ப முதலியார்.

ஓம்

# தமிழ்த் திருமணம்

———(o)———

'நீலமேனி வாலிழை பாகத்(து)
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே'

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

**திருமணம்** என்பது ஒரு காளைப்பருவத்து இளமகனும் ஒரு மங்கைப்பருவத்து இளமகளும் ஒன்றுகூடி இயற்கைக் காதல் இன்ப அன்பின் பெருக்கிலே திளைத்து இல்லறம் நடத்திவாழ, அவர்களை ஒன்று கூட்டுமாறு சிறப்புறச் செய்யப்பெறும் ஒரு மங்கல விழாச் செயலாகும். இது திருமணம் என்னும் சடங்கின் பொருளாம்.

இம்மங்கல விழாச் செயலால் ஒன்றுகூடும் இளமகனும் இளமகளும் அன்புடைக் காம இன்ப நலத்திலே திளைத்து, காதல் இன்ப அன்பினால் கட்டுப்பட்டு, அறநெறி நின்று உலகியலின் இல்லறம் நடத்துபவர்கள் ஆகின்றார்கள். இவ்வாறு இல்லறம் நடத்துகின்றபொழுது கடவுள் வழிபாடாற்றல், முன்னோர் வழிபாடாற்றல், விருந்தளித்தல் சுற்றம் தழுவல் தாமின்புறுதல் ஆகிய இல்வாழ்க்கை நல்லறங்கள் எல்லாம் இயல்பாக இனிதே நடைபெறுகின்றன.

இங்ஙனம் அன்பென்னும் பண்பிலே நிலைத்து இல்லறம் இனிது நடத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழும் இவர்கள் தங்கள் மனை மாட்சியின் மங்கலத்திற்கு அணிகலனாக அறிவறிந்த மக்கட்பேற்றை அடைந்து, இயல்பிலே அன்பு பெருகி, அறத்திலே மனந்தழைத்து, அறத்தின் வழி நின்று பொருளைப் பெருக்கி, அறத்தினைச் செய்து புகழைப்

பெருக்கி, புகழின் மிக்க புண்ணியராய் இன்பத்திலே திளைத்து வாழ்வாராகின்றனர். இங்ஙனம் குடும்பம் இன்பம் எய்த, கொண்டார் கொடுத்தார் இன்பம் எய்த, சுற்றமும் விருந்தும் இன்பம் எய்த, சூழல் எல்லாம் இன்பம் எய்த, ஊரெலாம் இன்பம் எய்த, நாடெலாம் இன்பம் எய்த எங்கும் இன்ப வாழ்க்கை வளர்ந்தோங்கி இலங்குமாறு காண்பதே தமிழ் மக்கள் கண்ட உலகியலின் பண்பாடாம்.

இங்ஙனம் ஒருவன் ஒருத்தியொடுகூடி இன்பந்துய்த்து அறம் வளர்த்துப் புகழுடன் வாழ்ந்து புனிதமுற்று இறைவன் திருவடிப் பேரின்பம் பெறுதற்பொருட்டே உலகப் படைப்பு ஆணும் பெண்ணுமாக அமைந்திலங்குகின்றது.

'பாங்கரும் சிறப்பிற் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே'

என்றபடி இவ்வுலக இன்பம் நிலையா இன்பமாதலின், இந் நிலையா இன்பத்தின் நிலைத்த மனத்தினை, அதனை நுகர்ந்து முதிர்ந்த அறிவான் மாற்றி, உலகுயிர்களின்பால் அன்பும் அருளுங் கொண்டு, இறைவன் அருள் வெள்ளப் பற்றுடையராய் வாழ்ந்து, இறுதியில், இறுதியில் இன்பம், நிறைந்த இன்பம், நிலைத்த இன்பம், மாசில் இன்பம் எனப் படும், இறைவன் திருவடிப் பேரின்ப வெள்ளம் படிதற் குரிய செந்நெறியில் அறம்புரி துணையொடு அமைந்து பயிறல் வேண்டும். இது,

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே

என ஆசிரியர் தொல்காப்பியனூரால் அறிவுறுக்கப்படு கின்றது. மேற்கூறிய வற்றிற்கெல்லாம் அடிப்படையாக இருப்பது வாழ்க்கைத் துணைநலமேயாம். இதனுனே தெய்வப்புலமைத் திருவள்ளுவனர் திருக்குறட் பாயிரத் திறுதியில் அறன் வலியுறுத்தல் கூறி, அடுத்த இல்லற வியலின் தொடக்கமாக இல்வாழ்க்கைச் சிறப்பினை எடுத்துக் காட்டி, அதற்கங்கமாக முதற்கண் வேண்டப்படுவது இஃதென்றுணர்த்த அதனை யடுத்து வாழ்க்கைத்துணை நலத்தினை வைத்துரைத் திருக்கின்றனர்.

இவ்வாழ்க்கைத் துணைநலத்தினை அளிக்கும் சிறப்புடையதாக இருப்பது திருமணம் என்னும் மங்கலமாம். ஆதலின் இம்மங்கல விழாச் செயலாகிய அதனைத் தமிழ் மக்கள் தமிழ் மரபின் பண்பாடும் தமிழ்க்கலைத் திறனும் உணர்ந்து நடத்துதல் வேண்டும். அப்பொழுது அங்கே நந் தாய்மொழியாகிய தமிழ் மொழியே முதல் இடம் பெறுவதாகும். தமிழ் மொழியும் தமிழ் மக்களும் முன்னேற்றம் அடைதல் வேண்டுமாயின், கடவுள் வழிபாடு, திருமணம் முதலிய செயல்கள் எல்லாம் தமிழ் மொழியிலேயே நடைபெறுதல் வேண்டும். இச்செயல்களை எல்லாம் தமிழ் மொழி கொண்டு நடத்துவதுதான், தமிழ் மொழியும் தமிழ் மக்களும் முன்னேற்றம் அடைந்து சிறந்து திகழ ஆக்கம் தருவதாகும். அயல் மொழிகொண்டு நடத்துமுறை நம்மையும் நம் மொழியையும் அயல் மொழிக்கும் அயலவர்க்கும் அடிமைப்படுத்துவதேயாம்.

'திசையனைத்தின் பெருமை எலாம்
தென்திசையே வென்றேற'
'அசைவில் செழுந் தமிழ்வழக்கே
அயல்வழக்கின் துறைவெல்ல'

என்ற சேக்கிழார் திருவாக்குகளை நினைந்து போற்றித் தமிழ் மக்கள் தமிழ் உணர்ச்சிகொண்டு, தமிழ் மொழி வளர்த்துத் தழைத்து ஓங்கி வாழ்வார்களாக.

நம் திருமணச் சடங்குகளை நம் தமிழ் மொழியால் நடத்திக்கொள்வதே நமக்கு நலந்தருவதாமெனத் தெளிந்து கொள்ளுதற்கு நம் முன்னோர்களாய பழந்தமிழ் மக்கள் தம் திருமணச் சடங்குகளை நடத்திக்கொண்ட முறையே நமக்கு வழிகாட்டுவதாக உள்ளது. அம்முறையினையும் தெய்வச் செந்தமிழ் மாமறையின் சிறப்பினையும் இங்கே காண்போமாக.

———

## பண்டைகாலத் தண்டமிழ் மக்கள் திருமணச் சடங்கு

பல்லாயிர ஆண்டுகட்குமுற்பட்ட பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின்கண்

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே

எனவரும் நூற்பா, பழந்தமிழ் மக்களது திருமணச் சடங்கு குறித்து எழுந்ததாகும். இந்நூற்பா உரையின்கண், ஆசிரியர் நச்சினர்க்கினியர் என்னும் அந்தணர், அக்கரணங்கள் இன்னதென விளக்க 'உழுந்து தலைப்பெய்த' எனத் தொடங்கும் அகநானூற்றின் 86-ஆம் பாடலை எடுத்துக் காட்டி 'இதனுள் வதுவைக்கு ஏற்ற கரணங்கள் நிகழ்ந்தவாறும், தமர் கொடுத்தவாறும் காண்க' எனக் கூறியுள்ளார். அதனல் இப்பாடலின்கண் கூறப்பட்ட சடங்குகள் தாம் பண்டைக் காலத்துத் தண்டமிழ் மக்கள் நடத்திய திருமணத்தின் கரணங்களாம் என்பது விளக்கமாகின்றது.

அப்பாடலின்கண் வெண்திங்கள் உரோகிணியைச் சேர்ந்து உச்சநிலை அடையும் நாளை மணத்திற்கு நன்னாளாகக் கோடல், மணப்பந்தலிட்டு அதன்கண் மணல்பரப்பி வைத்தல், பந்தலில் மலர் மாலைகள் தொங்கவிட்டு ஒப்பனை செய்துவைத்தல், அம்மனையில் விளக்கேற்றி வைத்தல், கடவுள் வழிபாடாற்றல், இருள் நீங்கி அழகுமிக்க காலையில் முதிய மங்கலப்பெண்டிர் தங்கள் உச்சியில் நீர்க்குடங்களில் நீர் கொண்டுவந்து முறை முறையாக அளித்தல், மக்கட்பேறுடைய மடந்தையர் நால்வர் அவைகளை வாங்கி நெல்லும் ஈரிதழ் மலரும் அவைகளில் இட்டு மணமகளை நோக்கி, 'நீ கற்பின் வழுவாது நல்ல அறங்கள் பலவற்றைச்செய்து கொழுநன் விரும்பும் மனைக்கிழத்தியாக வாழ்க' என வாழ்த்தி நீராட்டுவித்தல், வதுவை மணம் என்னும் அந்நீராட்டு முடிந்ததும் மணமகளுக்குப் புத்தாடை அணிந்து, மகட்கொடைக்குரியோரும் தமர் பலரும் ஒருங்குகூடி அம்மண மகளைப் 'பெரு மனைக்கிழத்தியாகப் பெருவாழ்வு வாழ்வாயாக' என வாழ்த்தி மணமகனுக்கு அளித்தல், உழுந்துகலந்த கொழுமை மிக்க நல்லுணவினை

எல்லோர்க்கும் ஆரவாரத்துடன் வரையாது விருந்தாக அளித்தல், அன்றிரவே மணமக்களை ஒன்று கூட்டுவித்தல் ஆகிய இவைகளே கரணமாகக் கட்டுரைக்கப்பட்டுள்ளது.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப

எனத் தொல்காப்பியப் பொருளதிகாரக் கற்பியலின்கண் வரும் மற்றோர் நூற்பாவின் உரையகத்து, ஆசிரியர் நச்சினார்க்கினியரே, 'மைப்பறப் புழுக்கின்' எனத் தொடங்கும் அகநானூற்றின் 136-ஆம் பாடலை எடுத்துக் காட்டியுள்ளார். இப்பாடலின் கண்ணும் மேற்கூறியவாறே அச்சடங்குகள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றால், மணநிகழ் இல்லத்தினை மலர்களால் அணி செய்வித்தல், மண முழவு ஒலிக்கச்செய்தல், விளக்கேற்றி வைத்தல், கடவுள் வழிபாடாற்றல், மணமக்களை நீராட்டிப் புத்தாடை புனைந்து அணிகலன் அணிவித்து மணப்பந்தலில் சுற்றத்தார் சான்றோரகப் பெண்ணிற்குரியோர் மணமகனுக்கு மணமகளைக் கொடையாக வாழ்த்திக்கொடுத்தல், வந்தவர் அனைவருக்கும் நல்லுணவை வள்ளன்மையோடு வரையாது அளித்தல் அன்றிரவே மணமக்களை ஒன்று கூட்டுவித்தல் ஆகிய இவைகளே திருமணச் சடங்குகளாக நிகழ்ந்தமை காணப்படுகின்றது. பார்ப்பனன் வந்து திருமணம் நடத்துதலும் வடமொழி மந்திரங்களும் கிடையா.

## மந்திரம்

பிற்காலத்தே இக்கரணம் என்னும் சடங்கு வடமொழி மந்திரங்கள் கொண்டு நடத்தப்படுவனவாக ஏற்படலாயிற்று. மந்திரம் என்பதற்கு ஓதுவார் தம்மைப் பாது காப்பது என்று பொருள் சொல்லப்படுகிறது. இப்பொழுது மந்திரங்கள் என்று திருமணங்களில் வடமொழியாளரால் வழங்கப்படுவன ஒன்றும் இக்குறிக் கோளுடையனவாக இல்லை. மந்திரங்கள் என்று வடமொழியாளரால் திருமணங்களில் சொல்லப்படுவன எல்லாம், அவர்கள் திருமணங்களில் செய்யுஞ் செயல்களைக் குறிப்பனவாகவே உள்ளன. சில வாக்கியங்கள் அவைகளின் பொருள்கள் தெரிந்தால் மிக அருவருக்கத்தக்க இழிந்த பொருள்களை உடையனவாக இருக்கின்றன. மணமகளைச் சந்திரனுக்கும், கந்தருவருக்கும், அக்கினி தேவனுக்கும் முன் மனைவியாகத்

தந்து பின் மணமகன் ஏற்றுக் கொள்வதென்பது தமிழ் மக்கள் வழக்கமன்று. இப்பொருளுடையது இச்சடங்கென்று தெரிந்தால் ஒவ்வொரு தமிழ் மகனும் கேட்ட அன்றே அப்போதே அச்சடங்கினை விலக்கி விடுவான் என்பது ஒருதலை. பொருள் புலப்படாத வேறு மொழியில் சடங்கு நிகழ்தலால் அது நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

## தமிழ் மந்திரம்

மந்திரமென்பது என்ன என்பதனை ஆசிரியர் தொல்காப்பியனார் வரையறுத்துக் கூறுகின்றார்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப

என்னுஞ் செய்யுளியல் நூற்பாவால் அது நன்குணரக் கிடக்கின்றது. இங்கே "சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றல் உடையார்'' இன்ன பயனைத்தருவதாக என்று வெளிப்படையாகச் சொல்லாது சொல்லும் ஆணைமொழி மந்திரம் எனப்படும் என்று கூறப்படுகின்றது. இந்நூற்பா உரையின்கண் பேராசிரியர், 'இங்ஙனம் கூறப்பட்டன தமிழ் மந்திரங்கள்' என்றும் 'அவற்றை வல்லார்வாய் கேட்டுணர்க' என்றும் குறிப்பிடுகின்றார். பின் ஆசிரியர் நக்கீரனார் வடமொழி சிறந்ததெனக்கூறிய ஒருவனை அவ்வடமொழியே தமிழ் மொழி சிறந்ததென ஒப்புக்கொள்ளுமாறு காட்டுகின்றேன் என்று கூறி வடமொழி சிறந்ததெனக் கூறிய அவன் உயிர்நீப்பவும் பின் உயிர்த்தெழுந்து தமிழின் பெருமை உணர்ந்து வாழவும் பாடியதாக உள்ள

முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—யரணிய
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தஞ் சேர்கசுவா கா— எனவும்

ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா— எனவும்

போந்த பாக்களை எடுத்துக்காட்டிச் சபித்தற் பொருளிலே வரும் அங்கதத்தின் நிலையையும் விளக்கி யிருக்கின்றார்.

இங்ஙனம் சொல்லிய சொல்லின் பொருண்மை, யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையார் ஆணைச் சொற்களே மந்திரங்களாதலும், அம்மந்திரங் களின் செயலாற்றலே அவற்றினாசிரியர் தமது கடவுட் டன்மையைக் காட்டுவதாதலும், விளக்க எண்ணிய ஆசிரியர் திருவள்ளுவனார் தொல்காப்பியனாரது மேற் காட்டிய நூற்பாவினை அது கிடக்குமுறையே தழுவிக் கொண்டு, சில சொற்களை மட்டில் மாற்றிப்பெய்து

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

என நீத்தார் பெருமையில் நிலையிட்டுரைத்திருக்கின்றார். எனவே செந்தமிழ் மக்கள் சேம நிதியாக விளங்கும் தொல்காப்பியமும், திருக்குறளும் வரையறுத்துக்காட்டும் மந்திர இலக்கணமுடையனவே மந்திரங்கள் எனத் தமிழ் மக்கள் இனியேனும் உணர்ந்து திருவருள் ஒளியிலே விளங்கிய தமிழ்ப் பெரியோர்கள் திருவருள் புரிந்த செந்தமிழ் மாமறைகளே அவ்விலக்கணம் நிரம்பிய திருமந்திரங்கள் என்பது கடைப்பிடித்து நலமடைவார்களாக.

பண்டைத் தமிழ் மக்கள் கண்ட மந்திர இலக்கணம் இதுவாகவும், இதனுண்மை உணராது, வடமொழியில் சொல்லப்படுபவைதாம் மந்திரங்கள் எனஎண்ணி ஏமாற்ற முறும் இக்காலத் தமிழ் மக்கள் நிலை பெரிதும் இரங்கத் தக்கது. அன்றியும் 'மணை போட்டேன்' (ஆசனம் சமர்ப்ப யாமி) 'வெற்றிலைப்பாக்குப் படைத்தேன்' (தாம்பூலம் சமர்ப் பயாமி) 'வாழைப்பழம் படைத்தேன்' (கதலீபலம் நிவேத யாமி) 'வெல்லம் படைத்தேன்' (குளோபகாரம் நைவேத்தி யாமி) 'தேங்காய் படைத்தேன்' (நாரிகேளம் நைவேத்தி யாமி) 'மலர் சூட்டினேன்' (புஷ்பம் சமர்ப்பயாமி) 'அரிசி தூவினேன்' (அக்ஷதன்ன மஹா) 'புகை காட்டினேன்' (தூபம் சமர்ப்பயாமி) 'விளக்கொளி காட்டினேன்' (தீபம் தரிசியாமி) முதலாகச் சொல்லப்படுவன எல்லாம் மந்திரங் களாக எண்ணும் நம்தமிழ் மக்கள் பேதைமை பெரிதும் வருந்தத் தக்கது. இவைகள் ஒழிய ஆரியர்களால் திரு மணங்களில் மந்திரங்கள் என்று சொல்லப்படுவன, மிக இழிந்த பொருள்களை உடையன என்பது முன்னரே குறிக் கப்பட்டது.

---

## தமிழ் மறைச் சிறப்பு

வேதங்கள் என்று சொல்லப்படும் அவ்வடமொழி மறைகளைக் காட்டினும் திருவருள் ஒளியிலே திகழ்ந்த நம் சமயாசாரியர்கள் திருவாய் மலர்ந்தருளிய செந்தமிழ்த் திருமாமறைகள் தெய்வ நலத்தில் சிறந்தனவாமென நம் பெரியோர்கள் பலர் கூறியிருக்கின்றனர்.

தமிழ் மறையருளிய சமயாசாரியர்கள் பாசஞான, பசுஞான நிலைகளின் நீங்கிப் பதிஞான மெனப்படும் சிவஞான நிலையினராய், சிவத்துவ விளக்கமெனப்படும் பரமானந்த சுவானுபவாதீத துரிய நிலையிலே தோய்ந்து நின்று திருவருள் வடிவாய்த்திகழும் பரநாத ஒலி வடிவால் திருவருள் புரிந்த செந்தமிழ் மாமறைகள், எல்லா மங்கல ஆற்றலும் நிறைந்து ஒளிவிடும் மந்திரங்களாம். ஆதலின் தமிழ் மாமறைகள் அங்ஙனம் சிறப்பிக்கப்பட்டன. தில்லைவாழந்தணருள் ஒருவரான உமாபதி சிவனர்

'கண்ட திருமந்திரமே மூவர் பாடல்
கைகாணு மந்திரம்கண் ணுதலோன் கூறல்'

எனக் கூறிச் செந்தமிழ் மாமறைகள் சிவானுபவப்பேறுடையனவாய்த் திகழ்தலும், இறைவன் திருவாக்கென்று உபசாரத்தால் கூறப்படும் வடமொழி மறைகள் அனுபவமாகா வெற்றுரைகளாதலும் விளக்கி யிருக்கின்றார்கள்.

* அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடும்
அதுபோலன் றிதுஎன்றும் உளதாம் உண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே அன்றிப்
பலரில்லை என்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாதாற் றெதிரே யோடும்
என்புக்கும் உயிர்கொடுக்கும் இடுநஞ் சாற்றும்
கரியைவளை விக்கும்கல் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே

என்னும் உமாபதி சிவாசாரியர் திருவாக்கு, செந்தமிழ் மாமறை, வடமொழி மறைபோன்று சிச்சிலிப் பறவை

*இது வேதவித்தாக விளங்கிய நம்பியாண்டார் நம்பிகள், ராஜராஜனுக்குக் கூறுவதாக—உமாபதி சிவாசாரியரால் திருமுறைகண்ட புராணத்து அருளிச்செய்யப்பட்டது.

களான் உண்டு விடப்பட்டு மறைந்தொழிந்து பின் தேடிப் பெற்ற குறைபாடுடையதன்றும் எனவும் கடவுள் ஒருவனே யன்றிப் பலரில்லை என்று உறுதி மொழிவதாமெனவும் எரியினில் வேகாதிருத்தல், ஆற்றின் எதிர்த்தோடல், என்புக்குயிர் கொடுத்தல், நஞ்சினை அமுதாக்கல், யானையை வணக்குவித்தல், கல்லினைத் தெப்பமாக்கல், முதலையுண்ட பிள்ளையை வருவித்தல் ஆகிய செயற்கரிய அற்புதங்களை ஆற்றிய தெய்விகம் மிக்குடையதாம் எனவும் எடுத்துக் காட்டிச் செந்தமிழ் மாமறையின் தெய்விகச் சிறப்பினை நிலை நாட்டுகின்றது.

பிற சமயச் சான்றோராகிய வில்லிபுத்தூரார் திருமகனார் வரந்தருவாரும்,

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நாவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்

என இவ்வற்புதங்களைச் செந்தமிழ்த் தெய்வச் சிறப்பாக எடுத்துக் காட்டுதல் காண்க.

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் என்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்

எனக்கூறிய சுத்த சைவராகிய பரஞ்சோதி முனிவரது திருவாக்கும் செந்தமிழ் மாமறைகளின் அதியற்புதத் தெய்விக நிலையினை விளக்க எழுந்ததே ஆகும். வடமொழி மறைக்கு இவ்வாற்றல் இன்றென்பதே அவரால் இங்குக் குறிக்கப்பட்டதாம்.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்

திருவா சகமிங் கொருகால் ஓதில்
கருங்கல் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே.

என்னுந் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கு, மங்கை பங்கனை முக்கட் பெருமான் உரையென உபசாரத்தால் உரைக்கப்பெறும் வடமொழி மறையோ, அல்லது பழம் பெருஞ் சிறப்பினையுடைய வாதவூரராகிய மணிவாசகப் பெருமான் திருவாய் மலரினின்றுந் தோன்றிய ஊனையுருக்கும் தேனுயினிக்கும் திருவாசகம் என்னும் செந்தமிழ் மாமறையோ, எது சிறந்தது என்று கேட்பீராயின், வடமொழி மறையைப் பலகால் ஓதினும் விழிநீர் பெருக நெஞ்சம்நெக்குவிட்டு உருகிநிற்பவர்களைக் கண்டோமில்லை. ஆனல் திருவாசகம் என்னும் செந்தமிழ் மாமறையை ஒருவர் ஒருகால் ஓதக் கேட்பினும், அக்கேட்போர் கருங்கல் மனமுடையரேனும், அவர் மனங்கரைந்துருக, கண்கள் மணற்கேணியின் ஊற்றென நீர் பெருக்கெடுத்தூற்ற, மெய்யெலாம் மயிர்சிலிர்த்து நிற்ப, உடல் எலாம் நடுநடுக்கெய்தி அன்பராய் விளங்குவரன்றி அன்பின்றி நிற்பார் உலகத் தொருவருமிலர் என்று விளக்கிக் காட்டுமாற்ருன் செந்தமிழ் மாமறையின் திவ்யாற்புத தெய்விக நிலையினை நிலைநாட்டுகின்றது.

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், தென்மொழி வடமொழியாகிய இருமொழியினும் பெரும்புலமை ஒருங்குவாய்ந்த அரும்பெரும் புலவர்சிகாமணியாவர். வடமொழி மாட்டு எவ்வகையானும் அபிமானம் குறைந்தவரல்லர். வடமொழி முன்னூல்கள் கொண்டு வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி முதலிய பல நூல்கள் செந்தமிழில் இயற்றிய பெரியார். அத்தகைய சைவத்துறவி ஒருவர் இங்ஙனம் கூறுவதாயின், அது தமிழ் மாமறையின் கடவுட் டன்மை உண்மையைக் காட்டுவதாமன்றிப் பிறிது யாதும் கருதியது அன்றுமென்பது மலை யிலக்காம்.

இந்நாற்ருண்டின் அருட் பிரகாச வள்ளலாராக இலங்கிய சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்,

இலைக்குள நீரழைத்ததனில் இடங்கருற அழைத்தன்வாய்த்
தலைக்குதலை மதலையுயிர் தழைப்பஅழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற் கலைக்குமுறு கணக்குயர்பொன்
மலைக்குமணு நிலைக்குமுரு வன்தொண்டப் பெருந்தகையே

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் துதிக்கு முகத்தால் முதலையுண்ட பாலனை அழைத்தளித்த அற்புத ஆற்றல் மிக்க திருநெறித் தமிழாகிய செந்தமிழ் மாமறைக்கும், அப் பெற்றி யொன்றுமின்றிக் கிடக்கும் வடகலையின் முதல் நூலாகிய வடமொழி மறைக்கும் உள்ள வேற்றுமை, அஃது ஒருபொன் மலை; இஃது ஓர் அணு என்று கூறுதற்கும் இயலாததாக இருக்கின்றதென்று கூறி, செந்தமிழ் மாமறை, இறை அருள் அனுபவ மந்திர உரையாக விளங்கும் நிலையுடைத்தாதலையும், வடமொழி மறை அப் பெற்றியற்ற வெற்றுரையாதலையும் விளக்கி யிருக்கின்றார்கள்.

ஒன்பதாந் திருமுறையருளிய ஒன்பதின்மருள் ஒருவராகிய திருமாளிகைத் தேவர்,

திசைக்குமிக் குலவுசீர்த்தித் தில்லைக்கூத் துகந்துதீய
நசிக்கவெண் நீறதாடும் நமர்களை நணுகாநாய்கள்
அசிக்கஆ ரியங்கள்ஓதும் ஆதரைப் பேதவாதப்
பிசுக்கரைக் காணா கண்வாய் பேசாதப் பேய்களோடே

என்ற பாடலால், வடமொழி மறைகளை ஆரியர்கள் ஓதுதல் பிறர் நகைக்கிலக்காக உள்ளதெனவும், அவர்கள் ஞமலிகள் எனவும், அறிவிலிகள் எனவும், பேத வாதம் பேசும் கொடியவர்கள் எனவும், அதனால் நம் கண் காணா, வாய் பேசாது, அப்பேய்களோடு எனவும் வெகுண்டு கடிந்து ஒதுக்கி யிருத்தல் காணப்படுகின்றது. இது நம்பியாண்டார் நம்பி என்னும் சைவ அந்தணரால், தமிழ் மறை எனக்கொண்டு ஒன்பதாந்திருமுறையில் போற்றி வைக்கப் பட்டுள்ள செந்தமிழ்ச் சைவ நன்னிதியாக இலங்குகின்றது.

வடமொழி மறைகட்கு ஏற்றம் தந்து பேசுவோர்களைக் கோபப்பிரசாத மென்னும் நூலருளிய நக்கீரனுர்,

‘பிச்சரைப் போலவோர்
ஆரியப் புத்தகப் பேய் கொண்டு புலம்புற்று
வட்டணை பேசுவர்’

எனச் சினந்து இழித்துரைக்கின்றார். இந்நூல் நம்பி யாண்டார் நம்பிகளால் பதினொராந்திருமுறையுள் போற்றி வைக்கப் பட்டுள்ளது.

மேற் காட்டியவைகளால் திருவருள் உருவாக விளங் கும் செந்தமிழ் மா மறைகட்கு வட மொழி மறைகள் எவ்வாற்றானும் ஒப்புடையன அல்ல என்பது விளக்க மாகின்றது.

வடமொழி மறையே தமிழ் மறைகட்கு ஒப்பாகாத பொழுது, வடமொழி மறையின் மந்திரங்கள் தானுமின்றி, வடமொழியில் உள்ள சாமானிய நூல்களின் உரைகள் கொண்டும், வடமொழி நூல் வழக்காறு மின்றி, வடமொழி யில் வழங்கும் வெற்றுரைகள் கொண்டும் ஆரியப்புரோகித ரால் செய்யப்பெறும் திருமணங்களின் நிலைமையை என் னென்று எடுத்தியம்புவது! இந்த உண்மைகளை உணராத தமிழ் மக்களுக்கு—அதினும் தமிழ்ப் பெண்மக்களுக்கு— தமிழ்த் தெய்வத்தின் திருவருள் அவர்கள் அனைவர் மனத்தி னும் விரைவில் தமிழ் மெய்யுணர்ச்சி ததும்பி எழுமாறு செய்வதாக எனத் தமிழ்த் தெய்வத்தின் திருவடித் தாமரை களை முப்போதும் முடிக்கணிந்து வழுத்தி வருவோமாக. பண்டைத் தண்டமிழ் மக்களது ஒழுகலாற்றினைப் பழந் தமிழ் நூற்களின் வழி ஆராய்ந்து காணினும், திருவருட் சிறப்பே முதலெனக்கொண்டு அவ்வழி நின்று ஆராய்ந்து காணினும் செந்தமிழ் மாமறைகொண்டு திருமணஞ்செய்தலே உலகின் அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றப்புகும் மக் கட்கு இயல்பினன் இல்வாழ்க்கை வாழும் நெறி இஃதெனக் காட்டி, அன்பும், அறனும், உடைய பெருவாழ்விலே திளைக்கச்செய்யும் பெருஞ் சிறப்புடையதாம் என்பது காணப்படுகின்றது.

தாயை நீக்கி ஒருவன் மணஞ்செய்து கொள்வானு யின் அவனை எங்ஙனம் உலகம் பழிக்குமோ அங்ஙனமே தாய் மொழியை நீக்கி மணஞ்செய்து கொள்வோர்களைத் தமிழ்த் தெய்வமும், தமிழ்ச் சான்றோர்களும் பழிப்பர் என்று தமிழர்கள் அறிதல் வேண்டும்.

———

## திருமணம் நிகழ்த்து முறை

திருமண இல்லம் அலங்கரிக்கப்பட்டிருக்க, மணமுரசு முழங்கிக் கொண்டிருக்க, விளக்குகள் ஏற்றி வைக்கப் பட்டிருக்க, திருமண ஓரைக்கு (வேளைக்கு) முன் மணமக்கள் மண நீராடி அலங்கரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

திருமண *ஆசிரியர், திருமணப் பந்தரில் அவருக்கு என இடப்பட்ட மணையில் வடக்கு நோக்கி அமர்ந்து, இருந்து, மணச் செயலுக்கு வேண்டிய மஞ்சள், குங்குமம், மலர், அரிசி, தேங்காய், பழம், வெற்றிலைப்பாக்கு முதலிய பொருள்களை எல்லாம் வாங்கித் தம் வலப்பக்கத்தே ஒரு தட்டிலேனும் ஓர் இலையிலேனும் வைத்துக் கொள்ளவேண்டும். பின்,

காப்பு நாண்களுக்காக முப்புரி நூலில் ஒவ்வோரடி அளவில் இரண்டு துண்டுகள் செய்து, மஞ்சள் பூசி அவைகளின் நடுவில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மஞ்சள் கொம்பினை முடிந்து அவற்றை, மஞ்சள் பூசி, குங்குமம் இட்ட ஒரு தேங்காய் மீது சுற்றி ஒரு தட்டில் அரிசிபோட்டு அதனிடையே இத்தேங்காயை வைத்து மலர் மாலை சூட்டி வெற்றிலைப்பட்டி வைத்து இறைவழி பாட்டிடத்தில் வைத்துக்கொள்க. அப்படியே மங்கல நாணுக்கென உள்ள நூலில் மஞ்சள் பூசி, தாலியை (மங்கலியத்தை) அதில் கோத்து அக்கயிற்றின் நடுவில் அதனை இருக்கும்படி அமைத்து, அதன் இரு பக்கங்களிலும் முடிபோட்டு, முன்போல மஞ்சள் பூசி, குங்குமம் இட்ட ஒரு தேங்காய்மீது சுற்றி, ஒரு தட்டில் அரிசிபோட்டு அதனிடையே இத்தேங்காயை வைத்து மலர் மாலை சூட்டி, ஒரு வெற்றிலைப்பட்டி வைத்து, அத்தட்டையும் இறைவழி பாட்டிடத்தில் வைத்துக் கொள்க.

புத்தாடைகளை வாங்கிப் பிள்ளைக்கு உரியவற்றை ஒரு தட்டிலும், பெண்ணுக்குரியவற்றை மற்றொரு தட்டிலுமாக வைத்துப் பிள்ளையும் பெண்ணும் அணிந்து கொள்ளவேண்டிய மலர் மாலைகளை, அவ்விரண்டு தட்டுக்களிலும் தனித் தனியே வைத்து, ஒவ்வொரு தட்டிற்கும் ஒவ்வொரு வெற்றிலைப்பட்டி வைத்துப் பிள்ளையின் ஆடைத் தட்டினை மணப் பந்தலில் மண ஆசிரியர் எதிரில் ஒரு முக்காலியின்மீது

---

*ஆசிரியர் என்ற சொல் திருமணத்தை நடத்துபவர் என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது.

வைத்துப் பெண்ணின் ஆடைத் தட்டினைத் தம் பக்கத்தே வைத்துக்கொள்க.

## புத்தாடை வாழ்த்திக் கொடுத்தல்

மணமகன் மணப்பந்தலை வலமாக வந்து, மண வறையில் மணமக்களுக்கென இடப்பட்டுள்ள மணையில் கிழக்கு நோக்கி அமர, ஆசிரியர், ஓர் இலையின்மேல் மஞ்சள் பிள்ளையார் பிடித்துவைத்துக் குங்கும திலதம் இட்டு "ஈண் டெழுந்தருள்க எந்தாய் போற்றி" என்றும் "இவ்வடிவமர்க ஈச போற்றி" என்றும் "அருளதுபுரிக அண்ணல் போற்றி" என்றும் போற்றுதல் புரிந்து, மலரால் அருச்சித்து, பழம், தேங்காய், வெற்றிலைப்பாக்குப் படைத்து, நறுமணப் புகை யிட்டு ஒளிகாட்டி இறை வழிபாடு புரிந்து, புத்தாடை வாழ்த்திக் கொடுக்க வணங்கி வாங்கிக்கொண்டு போகும் படி செய்க. பின் மண ஆசிரியர் மணமகள் ஆடைகள் வைத்துள்ள தட்டினை முன்போலத் தம் மெதிரிலுள்ள முக்காலி மீது வைக்க.

மணமகள் மணப்பந்தலை வலமாக வந்து மணவறையில் உள்ள மணையில் கிழக்கு நோக்கி அமர, மண ஆசிரியர் இறை வழிபாடு புரிந்து புத்தாடை வாழ்த்திக் கொடுக்க வணங்கி வாங்கிக்கொண்டு போகும்படி செய்க.

மண ஆசிரியர் மணமக்களை வாழ்த்துகின்ற போதெல் லாம் மஞ்சள் கலந்த அரிசியும் மலரும் அவர்கள் மீது தூவி வாழ்த்துக.

மணமகனும் மணமகளும் புத்தாடையும் மலர் மாலை யும் அணிந்து கொண்டு, தனித்தனியேனும் இருவரும் ஒன்ருகவேனும் அவரவர் வீட்டு வழக்கப்படி மணப்பந்த லில் மணப் பொங்கலைப் படைத்துவிட்டு, வலமாக வந்து மணவறையில் மண மணையில் வலப்பக்கம் பெண்ணும் இடப்பக்கம் பிள்ளையுமாகக் கிழக்கு நோக்கி அமருமாறு செய்க.

மண ஆசிரியர் மணமக்களுக்குத் திருநீறும் குங்கும மும் வாழ்த்திக் கொடுத்தபின் ஐந்தெழுத்து மந்திரப் பாட்டை ஓதுக.

4:3427 Acc No. 2326
N53

Dt 9.5.78.

## காப்புக் கட்டல்

மண ஆசிரியர், காப்பு நாண்சுற்றிய தேங்காயுடன் வைத்துள்ள அரிசித் தட்டினை மணமகனுக்கு முன் ஒரு முக்காலியின் மீது வைத்து, தட்டிலுள்ள தேங்காயை அரிசியுடன் மணமகனை இரண்டு கைகளாலும் அள்ளி எடுத்துக் கொள்ளச் செய்து அத்தேங்காயில் சுற்றியிருக்கும் காப்பு நாண்கள் இரண்டில் ஒன்றை எடுத்து, மேளம் ஒலிக்க, மணமகன் வலக்கையில் ஆசிரியர் கட்டுக. பின் அரிசித் தட்டுடன் முக்காலியை மணமகளின் முன் இழுத்து வைத்து மணமகளது இருகைகளையும் ஒன்றுகச் சேர்த்து ஏந்தும்படி சொல்லி, மணமகன் கையிலுள்ள தேங்காயை மணமகள் கைகளில் விடச்செய்து அத்தேங்காயில் சுற்றியுள்ள மற்ருெரு காப்பு நாணை எடுத்து, மணமகன் கையிற் கொடுத்து அதனை மணமகள் இடக்கையில் கட்டச்செய்து, பின் அத்தேங்காயை அரிசித்தட்டில் விட்டுவிடச் சொல்லித் தட்டினை முக்காலியுடன் அப்புறப் படுத்தி விடுக.

## பெற்றோர் வழிபாடு

ஆசிரியர் ஒரு பெரிய தட்டினைப் பிள்ளையின் எதிரில் வைத்துப் பிள்ளையின் தாய்தந்தையர்களை அத்தட்டில் பிள்ளையைப் பார்த்த வண்ணம் நிற்கச் சொல்லி, பிள்ளையின் கைகளால் அவர்கள் பாதங்களை நீரால் அலம்பச் செய்து, மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு மலர் தூவி, கர்ப்பூரம் காட்டி மணமகனை வணங்கச் சொல்லி அவர்தம் பாதங்களிலுள்ள மலர் அரிசி ஆகியவற்றை எடுத்துப் பிள்ளையின் மேலிட்டு வாழ்த்தச் செய்க. இது முடிந்ததும் அத்தட்டை அப்படியே இழுத்துப் பெண்ணின் எதிரில் வைத்துப் பெண்ணின் தாய் தந்தையர்களை அத்தட்டில் பெண்ணைப் பார்த்த வண்ணம் நிற்கச் சொல்லி முன் பிள்ளையின் தாய் தந்தையர்களுக்குச் செய்தன எல்லாம் செய்து முடித்து அத்தட்டை அகற்றி விடுக.

2326

## மங்கல நாண் சூட்டல்

மண ஆசிரியர், தம் எதிரில் மணப்பந்தல் நடு இடத்தில், மணலை யேனும் உமியை யேனும் அன்றி மணலின் மீது உமியை யேனும் பரப்பி ஓர் அடி அகல நீளத்தில் சதுரம் செய்து அதில் கிழக்கு முகமாக 'ஓம்'

என எழுதி அதன் மீது தருப்பையைப் பரப்பி அதன் மீது சமிதைகளை (சுள்ளிகளை) இட்டுச் சிறிது நெய் விட்டுக் கர்ப்பூரத்தைக் கொளுத்தி "இரு நிலனுய்" என்ற பாடலைச் சொல்லிச் சுள்ளிகளில் அக்கர்ப்பூரத்தைப் போட்டு, நெய்க் கிண்ணத்தைப் பிள்ளையின் எதிரில் வைத்து நெய்யைச் சிறிது சிறிதாகக் கரண்டியிலெடுத்து அழலில்விட்டுக் கொண்டிருக்கச் செய்து ஆசிரியர் சுள்ளிகளை எடுத்து மேன் மேலும் அழலில் போட்டுக் கொண்டே 'கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி' எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தை முழுவதும் ஓதி முடிக்கவும், இதனிடையே தாலியைச் சுற்றிய தேங்காயுடன் இருக்கும் தட்டினை வந்திருப் போர் வாழ்த்துப் பெற்று வருமாறு ஒருவரிடம் கொடுத்தனுப்பி, மஞ்சள் கலந்த அரிசியும் தனி மலரும் கொண்டு வாழ்த்து மாறு வந்திருப்போருக் கெல்லாம் கொடுத்து வருமாறு ஒருவரை அனுப்பி, மணமகன் உடன் பிறந்த சுமங்கலியை விளக்கு ஏற்றிக் கொண்டு வந்து பெண்ணின் பின் பக்கத்திருக்க வைத்துத் தாலி, வாழ்த்துப் பெற்று வந்ததும் ஆசிரியர் தம்மருகில் ஒரு முக்காலியின் மேல் அத்தாலியுள்ள தட்டினை வைத்துத் தேங்காயில் சுற்றி யிருக்கும் தாலியை எடுத்து மணமகள் அருகில் பிடித்து மணமகன் வலக்கையை மணமகளது வலத்தோள் பக்கமும் இடக்கையை மணமகள் இடத் தோள் பக்கமு மாகக் கொண்டு வந்து தாலியை வாங்கிக் கொள்ளக் கொடுத்து, மணமகள் கழுத்தில் கட்டி மூன்று முடிகள் போடச் செய்து, பின் அம்முடிகளின் மீது மஞ்சள் வைத்துக் குங்குமம் இடச் செய்க.

## மாலை மாற்றுவித்தல்

மணமகன் கழுத்தில் இரட்டையாக உள்ள மாலைகளில் ஒன்றை மணமகன் தன்கையாலெடுத்து மணமகள்கழுத்தில் இடச் செய்து அப்படியே பெண்ணின் கழுத்தில் இரட்டையாக உள்ளமாலைகளில் ஒன்றைப் பெண் தன் கையால் எடுத்துப் பிள்ளையின் கழுத்தில் இடச் செய்து இப்படி, பிள்ளை, பெண் ஆகிய இருவரும் மும்முறை மாலை மாற்றிக் கொள்ளும்படி செய்க. இது முடிந்ததும் பிள்ளைக்கு மெட்டிடுதல், பெண்ணிற்குச் சுற்றிடுதல், இருவருக்கும் பட்டங்கள் கட்டுதல் ஆகிய எல்லாம் செய்து கொள்ளச் சொல்லி, பின் மணமக்கள் இருவரும் எழுந்து கை கோத்த வண்ணம் மணப்பந்தலை மும் முறை வலம் வரச் செய்க.

## பொரியிடுவித்தல்

மணமக்கள் வலம் வரும்போது, பிள்ளையின் மைத்துனனை மணப்பந்தலுள் வந்திருக்கச் செய்து, ஒரு முறை வலம் வந்ததும் மணமக்களை அவர்கள் அமர்ந்திருந்த பக்கமாக மணப்பந்தலுள் வரச்செய்து, மைத்துனன் கைகளில் பொரியையிட்டு, அதைப் பிள்ளையின் கைகளில் விடச்செய்து, பிள்ளையின் கைகளிலிருந்து பெண்ணின் கைகளில் விடச்செய்து, பெண்ணின் கைகளிலிருந்து ஓமத் தீயில் விடும்படி செய்க. இம்மாதிரி மும்முறை வலம் வரும்போதும் செய்யச் செய்து மூன்றும் முறை முடிந்ததும் மணமகன் மைத்துனன் கைக்கு மோதிரம் இட்டு, மலர் மாலை சூட்டி, தாம்பூலம் கொடுத்துச் சந்தனம் பூசி, பனி நீர் தெளிக்கச் செய்க. பின் மைத்துனனைப் பந்தலிலிருந்து அகலச் செய்து மணமகனை வலப்பக்கத்தும் மணமகளை இடப்பக்கத்தும் உட்காரும்படி செய்க.

## பால் பழம் உண்பித்தல்

இடையில் பால் பழம் அருந்தச் செய்யப் பெற்றோர் விரும்பினல் மணமக்கள் கைகோத்த வண்ணம் பந்தலை வலம் வந்து கூடத்திற்குச் சென்று உட்காரச் செய்து பாலும் பழமும் அருந்தி மகிழ்ந்திருக்கச் செய்க.

## சேடையிட்டு வாழ்த்தல்

மணமக்கள் மாறி அமர்ந்ததும் அவர்கள் மடிமீது ஒரு துப்பட்டியை இடச்செய்து மண அறை நடுவில் ஒரு முக்காலி மீது ஒரு தட்டினை வைத்து அதில் அரிசியைக் கொட்டிவைத்திடுக. வேண்டிய அளவிற்கு அரிசியை மணப்பந்தல் பக்கத்தே வைத்துக்கொள்க. பின் திருமணம் செய்துவைத்த ஆசிரியர் எழுந்து நின்று மலரும் மஞ்சள் கலந்த அரிசியும் கொண்டு மணமக்கள் மீது தூவிப் பின் தம்மிருகைகளாலும் தட்டிலுள்ள அரிசியை அள்ளிக் கொண்டு பல்லாண்டு பாடிய வண்ணம் முதலில் பிள்ளை மடிமீதும் பின் பெண்ணின் மடிமீதும் விழப்பெய்து வாழ்த்திடுக. அதன்பின் முதியோராக உள்ள சிலர் இவ்வாறு சேடையிட்டு வாழ்த்துதல் புரியுமாறு செய்க.

திருமண வாழ்த்துகள் வந்திருப்பின் அவற்றைப் படித்து மணமக்களுக்கும் மணங்காண வந்துள்ள அனைவருக்கும் வழங்குமாறு செய்க.

இதன்பின் இரண்டொரு புலவர்கள் மணமக்களுக்கு அறவுரை வழங்குமுறையில் சுருக்கமும் விளக்கமுமாகச் சொற்பொழிவாற்றச் செய்யலாம்.

பரிசு வழக்கம் நீக்கப்படுதலே நன்முறையாகும். திருக்குறள், தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம், பத்துப்பாட்டு, புறநானூறு, அகநானூறு, மறைமலை அடிகளார் போன்ற பெரியோர்களது செந்தமிழ் உரை நடை நூல்கள் ஆகியவற்றைப் பரிசாக வழங்கலாம். கைம்மாறு கருதாது (பிரதி பலன்) பரிசு வழங்கவேண்டும் என விரும்புவோர் வெண்பொன் செம்பொன்னலாகிய கடிகாரம் எழுதுகோல், மோதிரம் போன்றவற்றை வழங்கலாம்.

## காப்புக் களைதல்

திரும்ப மணமக்கள் இருவரையும் மணப்பந்தலை வலமாக வந்து மணவறையில் அமரச் செய்து, ஆசிரியர் அழலில் சுள்ளிகளையிட்டுப் பிள்ளையின் முன் நெய்க் கிண்ணத்தை வைத்து நெய்யைச் சிறிது சிறிதாகக் கரண்டியில் எடுத்துவிடச் செய்து 'வேயுறு தோளிபங்கன்' எனத் தொடங்கும் பதிகத்தில் குறித்த பாடல்களை ஓதிமுடித்து முன் காப்புநாண் கட்டியிருந்த தேங்காய் வைத்துள்ள அரிசித்தட்டை முக்காலியுடன் பிள்ளையின் முன் வைத்து மேளம் முழக்க, பிள்ளையை அத் தேங்காயை அரிசியுடன் அள்ளி எடுத்துக் கொள்ளச் செய்து, பிள்ளையின் கையிலுள்ள காப்பு நாணை ஆசிரியர் களைந்து, தேங்காய் மீது வைத்திடுக. பின் அத்தட்டை முக்காலியுடன் பெண் முன் எடுத்து வைத்துப் பெண்ணைத் தன் இருகைகளையும் ஏந்தச் சொல்லிப் பிள்ளையின் கையிலுள்ள தேங்காயைப் பெண்ணின் கைகளில் விடச்செய்து, பெண்ணின் கையிலுள்ள காப்பு நாணைப் பிள்ளையைக் களையச் சொல்லி, அதனை அத் தேங்காயின் மீது வைக்கச் செய்து அத் தேங்காய் வைத்த அரிசியைத் தேங்காயுடன் மேளக் காரனுக்குக் கொடுத்து விடுக.

பின் ஆலத்தி சுற்றச்செய்து, மணமக்களை எழுப்பி, ஓர் இளம்பெண் விளக்குத் தட்டேந்தி முன்செல்ல, முளைப் பாலிகை ஏந்திய பெண் குழந்தைகள் உடன் செல்ல பின்னே மணமக்கள் இருவரும் கைகோர்த்த வண்ணம் மணப்பந்தலை வலமாக மும்முறை வந்து கூடத்தில்சென்று அமர்ந்திருக்கச் செய்க.

பின் திருமணஞ் செய்துவைத்த ஆசிரியருக்குப் பெண் வீட்டார் பிள்ளை வீட்டார் இருவரும் இருந்து சிறந்த தொரு மலர் மாலை சூட்டிப் பழங்களும், தேங்காய்களும், வெற்றிலைப்பாக்கும் ஒரு தட்டில் நிறையவைத்து ஆசிரியரிடம் கொடுத்து மணமக்கள் இருவரும் விழுந்து வணங்கி அவரது வாழ்த்துரையைப் பெற்றுக் கொள்ளுக.

மணங்காண வந்துள்ள அயல் இனத்தவர்க்கு முன்னே தாம்பூலம் வழங்கிப் பிறகு தம்மினத்தில் முதியோர் இரண்டொருவருக்குக் கொடுத்துவிட்டுப் பின் எல்லோருக்கும் சந்தனம், பனிநீர், மலர், வெற்றிலைப்பாக்கு வழங்கு மாறு செய்க.

## இறை வழிபாடு

திருச்சிற்றம்பலம்

அண்ணல் ஆலவாய் நண்ணி னுன்தனை
எண்ணி யேதொழத் திண்ணம் இன்பமே.

திருச்சிற்றம்பலம்

---

எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானெனஇ
றைஞ்சிஇமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபம்மலி
வாய்மையதனல்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்யஅமர்
கின்றஅழகன்
சந்தம்மலி குந்தளநன் மாதினெடு மேவுபதி
சண்பைநகரே.

திருச்சிற்றம்பலம்

---

## மணமகனுக்கு ஆடை வாழ்த்தி அளித்தல்

திருச்சிற்றம்பலம்

---

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாம்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணு
எம்மா னைஎளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலு மாமே.

## இறை வழிபாடு

திருச்சிற்றம்பலம்

---

வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்தனுகிப்
பூந்தாம நறுங்கொன்றைச் சடைக்கணிந்த
புண்ணியனுர் நண்ணுங்கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினுர்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே.

## மணமகளுக்கு ஆடை வாழ்த்தி அளித்தல்

திருச்சிற்றம்பலம்

நம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்பினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதற்கு
யாது மையுற வில்லையே.

## (மணமக்கள் இருவரும் வந்தமர்ந்ததும்)

இறை வழிபாடு

திருச்சிற்றம்பலம்

செல்வ நெடுமாடஞ் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன் னுள்ளங் குளிரும்மே.

## மணமக்களுக்குத் திருநீறளித்தல்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

## மணமகனுக்கு மந்திர மோதுதல்

திருச்சிற்றம்பலம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே.

## மணமகனுக்குக் காப்பு கட்டுதல்

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னொடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

## மணமகளுக்குக் காப்பு கட்டுதல்

திருச்சிற்றம்பலம்

பாடிளம் பூதத்தி னானும் பவளச்செவ் வாய்வண்ணத் தா
கூடிள மென்முலை யாளைக் கூடிய கோலத்தி னானும் [னும்
ஓடிள வெண்பிறை யானும் ஒளிதிகழ் சூலத்தி னானும்
ஆடிளம் பாம்பசைத் தானும் ஆரு ரமர்ந்த அம்மானே.

## பெற்றோர் வழிபாடு

திருச்சிற்றம்பலம்

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

திருச்சிற்றம்பலம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம்அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## அழலோம்பல்

திருச்சிற்றம்பலம்

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடை யடிகள் நின்றவாறே.

திருச்சிற்றம்பலம்

கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

வங்கமலி கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமே லொற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி

வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கு மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கு முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
யன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளுஞ்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

## மங்கல நாண் அணிவித்தல்

திருச்சிற்றம்பலம்

---

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணிநல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

திருச்சிற்றம்பலம்

---

ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ருருயிர் ஈருருக்கொண்
டானந்த வெள்ளத் திடைதிளைத் தாலொக்கும்அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம்வற் றாதுமுற் றாதிவ் வணிநலமே.

திருச்சிற்றம்பலம்

---

## மாலை மாற்றுவித்தல்

திருச்சிற்றம்பலம்

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள்நடமாடும் அணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கண் முகமலருங் கலயநல்லூர் காணே.

## பொரியிடுவித்தல்

திருச்சிற்றம்பலம்

அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்
றைம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர் கோயில்,
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத் தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணஞ்செய்யும் மிழலை யாமே.

## சேடையிட்டு வாழ்த்தல்

திருச்சிற்றம்பலம்

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## கோள்நவை நீக்கும் அழலோம்பல்

திருச்சிற்றம்பலம்

---

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

---

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனல்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

---

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதி யாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொன் மாலை யோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

---

திருச்சிற்றம்பலம்

---

### வாழ்த்து

நின்று மலர்தூவி இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க் கென்றும் இன்பமே.

திருச்சிற்றம்பலம்

---

என்றும் இன்பம் பெருகும் இயல்பினல்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்

---

## வழிபடு கடவுள் வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க வறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம்.

---

திருச்சிற்றம்பலம்.

ஓம்
திருச்சிற்றம்பலம்

இந்து சமயம் என்னும் பெயரால் பொது முறையில் குறிக்கப்படுகின்ற, சைவம், வைணவம், ஸ்மார்த்தம் ஆகிய சமயங்களைச் சார்ந்தவர்களில், ஸ்ரீ நீலகண்டசிவா சாரியரைக் குருவாகக் கொண்ட அந்தணர்கள், ஸ்ரீ சங்கரா சாரியாரைக் குருவாகக் கொண்ட ஸ்மார்த்தப் பிராம்மணர் களையாதல், ஸ்ரீ இராமானுஜாசாரியரைக் குருவாகக் கொண்ட வைணவப் பிராமணர்களையாதல், தலைவர்களாக ஏற்றுத் தம் மரபுச் சடங்குகளைச் செய்து கொள்ளமாட் டார்கள்.

ஸ்ரீ சங்கராசாரியரை குருவாகக் கொண்ட ஸ்மார்த்தப் பிராம்மணர்கள், ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியரைக் குருவாகக் கொண்ட சைவ அந்தணர்களையாதல் ஸ்ரீ ராமானுஜாசாரி யரைக் குருவாகக் கொண்ட வைணவப் பிராமணர்களை யாதல் தலைவர்களாக ஏற்றுத் தம் மரபுச் சடங்குகளைச் செய்துகொள்ள மாட்டார்கள்.

ஸ்ரீ இராமானுஜாசாரியரைக் குருவாகக் கொண்ட வைணவப் பிராமணர்கள், ஸ்ரீ சங்கராசாரியரைச் குருவாகக் கொண்ட ஸ்மார்த்த பிராமணர்களையாதல், ஸ்ரீ நீலகண்ட சிவசாரியரைக் குருவாகக் கொண்ட சைவ அந்தணர்களை யாதல் தலைவராக ஏற்றுத் தம் மரபுச் சடங்குகளைச் செய்து கொள்ள மாட்டார்கள்.

சைவ, வைணவ, ஸ்மார்த்த வகுப்பைச் சார்ந்த பிராம் மணர்கள் எவரும் ஸ்ரீ மத்துவாசாரியரைக் குருவாகக் கொண்ட மாத்துவப் பிராம்மணர்களைத் தலைவர்களாக ஏற்றுத் தம் மரபுச் சடங்குகளைச் செய்துகொள்ள மாட் டார்கள்.

ஸ்ரீ மத்துவாசாரியரைக் குருவாகக் கொண்ட மாத் துவப் பிராமணர்களும் மேற்குறித்த, சைவ, வைணவ, ஸ்மார்த்தப் பிராமணர்களைத் தலைவர்களாக ஏற்றுத் தம் மரபுச் சடங்குகளைச் செய்துகொள்ள மாட்டார்கள்.

வைணவப் பிராமணர்களுக்குள்ளேயே வடகலைப் பிரா மணர்கள் தென்கலைப் பிராமணர்களைத் தலைவர்களாக

V211



ஏற்று எந்தச் சடங்கினையும் செய்துகொள்ள மாட்டார்கள். தென்கலைப் பிராமணர்கள் வடகலைப் பிராமணர்களைத் தலைவர்களாக ஏற்று எந்தச் சடங்கினையும் செய்துகொள்ள மாட்டார்கள்.

ஜைனர்கள், பவுத்தர்கள், கிறித்தவர்கள், மகம்மதியர்கள் ஆகிய உலகிலுள்ள எச்சமயத்தவர்களும் தம்மின் வேறுபட்ட சமயத்தவர்களைத் தலைவர்களாக ஏற்றுத் தம் மரபுச் சடங்குகளைச் செய்துகொள்ள மாட்டார்கள்.

உலகின்கண்ணுள்ள எல்லாச் சமயத்தவர்களும் இவ்வாறிருப்பச் சைவம் வைணவம் ஆகிய இரு சமயங்களைச் சார்ந்த தமிழ் மக்கள் மட்டில், எந்தச் சமயத்தைச் சார்ந்தவராக இருப்பினும் அவர் பிராம்மணராக இருந்தால் அவரைத் தலைவராக ஏற்றுத் தம் மரபுச் சடங்குகளைச் செய்துகொள்ளுதல் எள்ளி நகையாடற்கிலக்காக இருக்கிறது. இதற்குக் காரணம் இவர்கள் தம் சமயம் இன்னதென அறியாமையேயாம் என்பது வெள்ளிடை மலையாம். சமய உண்மையை உணர்வதற்குச் சமயஞானம் வேண்டும். அது செந்தமிழ் மொழியை நன்கு கற்று நற்புலமை எய்திப் பின் நிறைந்த சமய ஞானியாயுள்ள நல்லாசிரியர் பால் சமய சாத்திரங்களை ஓதியுணர்ந்து அவற்றின் துறைபோய் அறிவுடையராய் ஒழுக்க நெறி இழுக்கா நல்ல உத்தமராகச் சிறந்து விளங்கும் சான்றோர்களை அடுத்துப் பல்காற் பழகி அறிந்துகொள்ள வேண்டுவதொன்றாம். இவ்வாறு சமயஞானம் கைவரப் பெறாதார் உலகியலில் எத்துணை உயர்ந்தோராயினும் அவர் சமயஞான உண்மை குறித்துப் பேசுதற்கு உரியராகார். தாம் அறியாத ஒன்றைக்குறித்து அவர் எவ்வாறு முடிவு கூறமுடியும்? இது தானும் உணராது சமய சம்பந்தமாகப் பேசும் நண்பர்கள் செயல் பெரிதும் வருந்தத் தக்கது.

சைவத் தமிழ் மக்கள் சைவத் தமிழ்ப் புலவர்களை வைத்துக்கொண்டும், வைணவத் தமிழ் மக்கள் வைணவத் தமிழ்ப் புலவர்களை வைத்துக்கொண்டும் திருமணம் முதலிய மரபுச் செயல்களைச் செய்துகொள்ளுதலே முறையாம் என்று கூறினால், சமய ஞானம் ஏது மறியாத தமிழன்பர்கள் பிராமணர்களை வைத்து நடத்தினால் என்னகுறை என்று சினத்துடன் முனைத்து நின்று பேசுகின்றார்கள். தம்